# PAPER-III
# TAMIL

**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________________

   (Name) ____________________________

2. (Signature) ____________________________

   (Name) ____________________________

OMR Sheet No. : ...............................................

(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |

(In figures as per admission card)

Roll No.________________________________

(In words)

**D 2 6 1 4**

Time : **2 1/2** hours] [Maximum Marks : **150**

Number of Pages in this Booklet : **24** Number of Questions in this Booklet : **75**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of seventy five multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the circle as indicated below on the correct response against each item.
   **Example :** Ⓐ Ⓑ ● Ⓓ
   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet and Original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are, however, allowed to carry original question booklet and duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचहत्तर बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात् किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।**
   (iii) इस जाँच के बाद OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं । आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है ।
   **उदाहरण :** Ⓐ Ⓑ ● Ⓓ
   जबकि (C) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं । यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं ।
9. आपको परीक्षा समाप्त होने पर प्रश्न-पुस्तिका एवं मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें । हालांकि आप परीक्षा समाप्ति पर मूल प्रश्न-पुस्तिका तथा OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं ।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें ।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं ।**



www.examrace.com

# TAMIL
# தமிழ்
## Paper-III
## தாள் - III

**Note :** This paper contains **seventy five (75)** objective type questions of **two (2)** marks each. **All** questions are compulsory.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் எழுபத்தைந்து (75) விடைதெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவிற்கும் இரண்டு (2) மதிப்பெண்கள் உண்டு. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. முதல் தமிழ் இலக்கண நூலை அகத்தியர் இயற்றினார் என்ற குறிப்பு இடம் பெற்ற நூல்
   (A) யாப்பருங்கல உரை
   (B) நம்பி அகப்பொருள்
   (C) இறையனார் அகப்பொருள் உரை
   (D) தண்டியலங்காரம்

2. பௌத்த மதக் காப்பியம்
   (A) குண்டலகேசி (B) நீலகேசி
   (C) பிங்கல கேசி (D) கால கேசி

3. கவிச் சக்கரவர்த்தி என்ற பட்டம் பெற்றவர்
   (A) புகழேந்தி
   (B) அதிவீரராம பாண்டியர்
   (C) ஜெயங் கொண்டார்
   (D) ஒட்டக் கூத்தர்

4. விருத்தப் பாவால் ஆனது
   (A) சிலப்பதிகாரம் (B) பெரியபுராணம்
   (C) பெருங்கதை (D) மணிமேகலை



www.examrace.com

5. சிவஞான போதம் இயற்றியவர்
   (A) சிவஞான முனிவர்
   (B) மெய்கண்டார்
   (C) உய்ய வந்த தேவநாயனார்
   (D) திருக்களிற்றுப்படியார்

6. பரிமேல் அழகர் உரையில் உள்ள கருத்துக்களை விளக்கித் தனிநூல் இயற்றியவர்
   (A) அதிமதுர கவி
   (B) அந்தகக் கவி வீரராகவர்
   (C) திருக்குருகைப் பெருமாள் கவிராயர்
   (D) திருமேனி ரத்தினக் கவிராயர்

7. தொன்னூல் விளக்கத்தில் கூறப்படும் சிற்றிலக்கிய வகைகள்
   (A) 93 (B) 96
   (C) 98 (D) 91

8. தமிழில் கிடைக்கும் மிகப் பழைய தாலாட்டுப் பாட்டைப் பாடிய ஆழ்வார்
   (A) நம்மாழ்வார் (B) பெரியாழ்வார்
   (C) பேயாழ்வார் (D) பூதத்தாழ்வார்

9. திருப்பாவை ஜீயர் என்று புகழப் பட்டவர்
   (A) வேதாந்த தேசிகர்
   (B) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
   (C) ராமானுஜர்
   (D) திருவரங்கத்து அமுதனார்

10. நெடுமாறனைப் புகழ்ந்து எழுதப்பட்ட கோவை
   (A) பாண்டிக் கோவை
   (B) தஞ்சைவாணன் கோவை
   (C) திருவெங்கைக் கோவை
   (D) வருக்கைக் கோவை



www.examrace.com

11. நெஞ்சைத் தூது விடுத்துப் பாடியவர்
   (A) உமாபதி சிவாசாரியார்
   (B) பலபட்டடை சொக்கநாதப் புலவர்
   (C) ஒட்டக் கூத்தர்
   (D) அருள் நந்தி சிவாச்சாரியார்

12. சிவபெருமானின் திருவிளையாடல்களைக் கூறும் முதல் தமிழ் நூல்
   (A) அற்புதத் திருவந்தாதி
   (B) கல்லாடம்
   (C) திருவாசகம்
   (D) திருவிளையாடற் புராணம்

13. காசிக் காண்டம் இயற்றியவர்
   (A) காளமேகப் புலவர்
   (B) அதிவீரராம பாண்டியர்
   (C) ஆண்டிப் புலவர்
   (D) ராமாநுசக் கவிராயர்

14. அஷ்டப் பிரபந்தத்துள் திருவரங்கம் பற்றியவை
   (A) ஐந்து (B) இரண்டு
   (C) நான்கு (D) ஆறு

15. 'ல' என வரும் புள்ளி முன்னர் தகரம் புணரும்போது தோன்றுவது
   (A) ன (B) ற்
   (C) ண (D) ர

16. பட்டினத்தார்
   I காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தவர்
   II பத்ரகிரியாரின் ஆசிரியர்
   III 11-ஆம் திருமுறையில் இடம்பெற்றுள்ள பாடல் பாடியவர்
   IV 'பட்டினத்துப் பிள்ளையார் திரட்டு' இயற்றியவர்
   இவற்றுள்
   (A) I, II, IV சரி (B) I, II, III சரி
   (C) II, III, IV சரி (D) I, III, IV சரி



www.examrace.com

17. அருணகிரிநாதர்

I பாடல்களில் வடசொற்களை மிகுதியாகக் கலந்தவர்

II சந்தப் பாடல்கள் பாடுவதில் வல்லவர்

III கந்தர் அகவல் பாடியவர்

IV முருகன் மீது பக்திப் பாடல்கள் பாடியவர்

இவற்றுள்

(A) I, II,III சரி (B) I, III, IV சரி

(C) II, III,IV சரி (D) I, II, IV சரி

18. நீதி நூல் இயற்றியவர்கள்

I சிவப்பிரகாசர்

II வரதுங்கராம பாண்டியர்

III குமரகுருபரர்

IV அதிவீர ராம பாண்டியர்

இவற்றுள்

(A) I, II, IV சரி (B) I, III, IV சரி

(C) II,III, IV சரி (D) I, II, III சரி

19. சைன சமயத்தைச் சார்ந்தவர்கள்

I இளம்பூரணர் II நச்சினார்க்கினியர்

III குணசாகரர் IV மயிலை நாதர்

இவற்றுள்

(A) I, II, IV சரி (B) I, III, IV சரி

(C) I, II, III சரி (D) II, III, IV சரி

20. திருப்பள்ளியெழுச்சி பாடியவர்கள்

(I) மாணிக்கவாசகர்

(II) தொண்டரடிப்பொடி ஆழ்வார்

(III) தத்துவராயர்

(IV) சிதம்பர சுவாமிகள்

இவற்றுள்

(A) I, II சரி (B) I, II, III சரி

(C) II, III, IV சரி (D) I,II, III, IV அனைத்தும் சரி



www.examrace.com

**21.** பாரதம் பாடிய பெருந்தேவனாரின் கடவுள் வாழ்த்து இடம் பெற்ற நூற்கள்

I அகநானூறு II புறநானூறு

III பதிற்றுப்பத்து IV ஐங்குறுநூறு

இவற்றுள்

(A) I,II,III சரி (B) II III, IV சரி

(C) I,II, IV சரி (D) I, III, IV சரி

**22.** சித்திரகவி வகையைச் சார்ந்த பாடல்களைப் புனைந்தவர்கள்

I திருமங்கையாழ்வார்

II திருஞானசம்பந்தர்

III நக்கீர தேவ நாயனார்

IV சேக்கிழார்

இவற்றுள்

(A) I,II,IV சரி (B) II III, IV சரி

(C) I,II, III சரி (D) I, III, IV சரி

**23.** காளமேகப் புலவர்

I ஆசுகவிகள் பாட வல்லவர்

II எள்ளல் பாடல்கள் புனைந்தவர்

III சிலேடை அமைத்துப் பாடுவதில் வல்லவர்

IV சித்திரமடல் என்ற இலக்கிய வகையைப் படைத்தவர்

இவற்றுள்

(A) I,II,III சரி

(B) II III, IV சரி

(C) I,III, IV சரி

(D) I, II,III, IV அனைத்தும் சரி



www.examrace.com

24. பரணி இலக்கியம் என்பது

(I) ஆயிரம் யானைகளைப் போரில் வீழ்த்திய மன்னனுக்குப் பாடப்படுவது

(II) பரணிநாளில் கொற்றவைக்குப் படையலிட்டுச் சிறப்புச் செய்வதைப் பற்றிப் பாடுவது

(III) ஏர்க்களத்தை ஏற்றிப் பாடுவது

(IV) பரண் மீது ஏறியமர்ந்து மன்னனின் வெற்றியைப் பாடுவது

இவற்றுள்

(A) I, II, IV சரி (B) I, III, IV சரி

(C) II, III,IV சரி (D) I, II, IV சரி

25. மும்மணிக்கோவை என்பது

I நிலையாமை பற்றிப் பாடுவது

II நேரிசை வெண்பா, நேரிசை ஆசிரியப்பா, கலித்துறை ஆகிய பாக்கள் அடுத்தடுத்து வருமாறு பாடப்பட்டது

III அந்தாதித் தொடையில் அமைந்தது

IV முப்பது பாடல்கள் கொண்டதாக அமைவது

இவற்றுள்

(A) I,II,III சரி (B) I, II, IV சரி

(C) II, III, IV சரி (D) I, III, IV சரி

26. <u>உறுதிக்கூற்று</u>: (உ) சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று அலங்காரப் பஞ்சகம் என்பதாகும்

<u>காரணம்</u>: (கா) வெண்பா, கலித்துறை, ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம், வண்ணம் ஆகிய பாக்களின் வரிசையில் அழகுபடப் பாடப்படுவது அது

(A) (உ) சரி (கா) சரியன்று

(B) (உ) சரியன்று (கா) சரி

(C) (உ) (கா) இரண்டும் சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியன்று



www.examrace.com

27. <u>உறுதிக்கூற்று</u>: *(உ)* சிற்றிலக்கிய வகைகளுள் அநுராகமாலை என்பதும் ஒன்றாகும்
<u>காரணம்</u>: *(கா)* அது சிற்றின்ப வேட்கையைப் பாடுகிறது
(A) *(உ) (கா)* இரண்டும் சரி
(B) *(உ)* சரியன்று *(கா)* சரி
(C) *(உ),(கா)*இரண்டும் சரியன்று
(D) *(உ)* சரி *(கா)* சரியன்று

28. <u>உறுதிக்கூற்று</u>: *(உ)* அருணந்தி தான் இயற்றிய நூலுக்கு இருபா இருபஃது எனப் பெயரிட்டார்
<u>காரணம்</u>: *(கா)* வெண்பா, ஆசிரியப்பா ஒன்றன் கீழ் ஒன்று தொடர அதனை நாற்பது பாடல்களில் பாடியுள்ளார்
(A) *(உ)* சரி *(கா)* சரியன்று
(B) *(உ) (கா)* இரண்டும் சரி
(C) *(உ)* சரியன்று *(கா)* சரி
(D) *(உ) (கா)*இரண்டும் சரியன்று

29. <u>உறுதிக்கூற்று</u>: *(உ)* கைகோள்களுள் முதலாவது களவியல்
<u>காரணம்</u>: *(கா)* காதல் துறைகளுள் பலரும் அறியாததும் திருமணத்துக்கு முற்பட்டதுமான வாழ்க்கை நிகழ்வுகளைக் கூறுவது
(A) *(உ)* சரி *(கா)* சரியன்று
(B) *(உ) (கா)* இரண்டும் சரி
(C) *(உ)* சரியன்று *(கா)* சரி
(D) *(உ) , (கா)* இரண்டும் சரியன்று

30. <u>உறுதிக்கூற்று</u>: *(உ)* தல புராணங்கள் பலவற்றுக்கு மறுபதிப்புத் தேவையில்லாமல் போய்விட்டது
<u>காரணம்</u>: *(கா)* தகவலுக்குத் தரும் முதன்மை இலக்கியச் சுவைக்குத் தரப்படவில்லை
(A) *(உ)* சரி *(கா)* சரியன்று
(B) *(உ)* சரியன்று *(கா)* சரி
(C) *(உ) ;(கா)*இரண்டும் சரி
(D) *(உ) , (கா)* இரண்டும் சரியன்று


www.examrace.com

31. <u>உறுதிக்கூற்று</u>: (உ) தேம்பாவணி அறம், பொருள், வீடு ஆகிய மூன்றையும் பாடுகிறது
<u>காரணம்</u>: (கா) நூலாசிரியர் குறிப்பிடுமாறு அது அகநிலைக் காப்பியம் ஆகும்
(A) (உ) சரியன்று (கா) சரி
(B) (உ) (கா) இரண்டும் சரி
(C) (உ) (கா)இரண்டும் சரியன்று
(D) (உ) சரி , (கா) சரியன்று

32. <u>உறுதிக்கூற்று</u>: (உ) காஞ்சி மாலை என்பது ஒரு சிற்றிலக்கியத்தின் பெயர்
<u>காரணம்</u>: (கா) அது காஞ்சி மாநகரின் சிறப்பைப் பாடுகிறது
(A) (உ) (கா) இரண்டும் சரி
(B) (உ) சரியன்று (கா) சரி
(C) (உ) (கா) இரண்டும் சரியன்று
(D) (உ), சரி (கா) சரியன்று

33. <u>உறுதிக்கூற்று</u>: (உ) தமிழில் முதன் முதலில் எழுதப்பட்ட காந்திய நாவல் சபேசன் அல்லது சுதந்திர ரட்சகன்
<u>காரணம்</u>: (கா) அந்த நாவலாசிரியருக்குக் காந்தியத்தின் மீது நாம்பிக்கை இல்லை
(A) (உ) சரி (கா) சரியன்று
(B) (உ) (கா) இரண்டும் சரி
(C) (உ) சரியன்று (கா) சரி
(D) (உ), (கா) இரண்டும் சரியன்று

34. <u>உறுதிக்கூற்று</u>: (உ) தஞ்சைப் பெரிய கோயில் ராசராச சோழனால் கட்டப்பட்டது
<u>காரணம்</u>: (கா) வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றதின் அடையாளமாக அவர் அக்கோயிலைக் கட்டினார்
(A) (உ) சரி (கா) சரியன்று
(B) (உ) ; (கா) இரண்டும் சரி
(C) (உ) சரியன்று (கா) சரி
(D) (உ) (கா)இரண்டும் சரியன்று


www.examrace.com

35. <u>உறுதிக்கூற்று</u>: (உ) தொண்டைமான் இளந்திரையனின் ஆட்சி மிகச் சிறப்பானதாகப் போற்றப்படுகிறது.

<u>காரணம்</u>: (கா) அவர் ஆட்சியில் 'காட்டு மாவும் உறுகண் செய்யா'

(A) (உ), சரி (கா) சரியன்று

(B) (உ), (கா) இரண்டும் சரி

(C) (உ) (கா) இரண்டும் சரியன்று

(D) (உ) சரியன்று (கா) சரி

36. <u>உறுதிக்கூற்று</u>: (உ) 'மதங்க சூளாமணி' என்பது விபுலானந்தர் எழுதிய நூல்

<u>காரணம்</u>: (கா) மதங்க சூளாமணியைக் கதைத் தலைவியாகக் கொண்டு பாடப்பட்டது

(A) (உ), சரி (கா) சரியன்று

(B) (உ), (கா) இரண்டும் சரி

(C) (உ) சரியன்று (கா) சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியன்று

37. <u>உறுதிக்கூற்று</u>: (உ) 'என் நெஞ்சம் திறப்போர் நிற்காண்குவரே' என்கிறது அகநானூறு

<u>காரணம்</u>: (கா) தலைவன் உள்ளத்தில் தலைவி உறைந்திருக்கிறாள்

(A) (உ), சரி (கா) சரியல்ல

(B) இரண்டும் சரியல்ல

(C) (உ) சரியன்று ; (கா) சரி

(D) (உ) (கா) இரண்டும் சரி

38. <u>உறுதிக்கூற்று</u>: (உ) 'புதுமுகம் புரிதல்' என்பது களவு மெய்ப்பாடுகளுள் ஒன்று

<u>காரணம்</u>: (கா) நகு நயம் மறைத்த வழியும் உள்ளம் சிதைந்து நிறையழியுமாதலின் அச்சிதைவு புறத்தார்க்குப் புலனாகாது

(A) (உ) சரி (கா) சரியன்று

(B) (உ) சரியன்று (கா) சரி

(C) (உ) (கா) இரண்டும் சரி

(D) (உ), (கா) இரண்டும் சரியன்று



www.examrace.com

**39.** <u>உறுதிக்கூற்று:</u> (உ)அணிகளுக்கெல்லாம் தாயாக உருவக அணி கூறப்படுகிறது.

<u>காரணம்:</u> (கா) அதிலிருந்துதான் எல்லா அணிகளும் தோன்றுகின்றன

(A) (உ) சரி (கா) சரியன்று

(B) (உ) ; (கா) இரண்டும் சரியன்று

(C) (உ) சரியன்று (கா) சரி

(D) (உ), (கா) இரண்டும் சரி

**40.** <u>உறுதிக்கூற்று:</u> (உ) உவமைக்கவிஞர் என்று சுரதா போற்றப்படுகிறார்.

<u>காரணம்:</u>(கா) அவரது படைப்புக்களில் உவமை அணி மேலோங்கியுள்ளது.

(A) (உ) சரி ; (கா) சரியன்று

(B) (உ), (கா)இரண்டும் சரி

(C) (உ) சரியன்று : (கா) சரி

(D) (உ), (கா)இரண்டும் சரியன்று

**41.** <u>நிரல்படுத்துக.</u>

பாவினம்

(A) துறை, விருத்தம், தாழிசை, பா

(B) தாழிசை, துறை, விருத்தம், பா

(C) பா, துறை, தாழிசை, விருத்தம்

(D) பா, தாழிசை, துறை, விருத்தம்

**42.** <u>நிரல்படுத்துக.</u>

இலிங்க வகை

(A) தேயு, வாயு, அப்பு, பிருதிவி

(B) பிருதிவி, அப்பு, தேயு, வாயு

(C) அப்பு, பிருதிவி, வாயு, தேயு

(D) வாயு, தேயு, பிருதிவி, அப்பு



www.examrace.com

**43.** <u>நிரல்படுத்துக.</u>

அநந்த நான்மை

(A) அநந்த குணம், அநந்த தரிசனம், அநந்த வீரியம், அநந்த சுகம்

(B) அநந்த தரிசனம், அநந்த குணம், அநந்த வீரியம், அநந்த சுகம்

(C) அநந்த சுகம், அநந்த குணம், அநந்த வீரியம், அநந்த தரிசனம்

(D) அநந்த வீரியம், அநந்த தரிசனம், அநந்த சுகம், அநந்த குணம்

**44.** <u>நிரல்படுத்துக.</u>

அந்தணருக்குரியவை

(A) நூல், கரகம், மணை, முக்கோல்

(B) கரகம், முக்கோல், மணை, நூல்

(C) நூல், கரகம், முக்கோல், மணை

(D) முக்கோல், மணை, கரகம், நூல்

**45.** <u>நிரல்படுத்துக.</u>

நாற்றிசை

(A) குணதிசை, பச்சிமதிசை, பூர்வதிசை, உத்தரதிசை

(B) பச்சிமதிசை, பூர்வதிசை, உத்தரதிசை, குணதிசை

(C) பூர்வதிசை, உத்தரதிசை, குணதிசை, பச்சிமதிசை

(D) குணதிசை, பச்சிமதிசை உத்தரதிசை, பூர்வதிசை

**46.** <u>நிரல்படுத்துக.</u>

யுகம்

(A) கிரேதம், திரேதம், கலி, துவாபரம்

(B) கலி, துவாபரம், கிரேதம், திரேதம்

(C) கிரேதம், திரேதம், துவாபரம், கலி

(D) திரேகம், துவாபரம், கலி, கிரேதம்



www.examrace.com

**47.** <u>நிரல்படுத்துக.</u>

தீதானவை

(A) தீயாரைக் காணல், அவர்சொல் கேட்டல், அவர்குணம் உரைத்தல், அவரொடு இணங்கல்

(B) தீயார் சொல் கேட்டல், அவர்குணம் உரைத்தல், அவரைக் காணல், அவரொடு இணங்கல்

(C) தீயார்குணம் உரைத்தல், அவர்சொல் கேட்டல், அவரொடு இணங்கல், அவரைக் காணல்

(D) தீயாரைக் காணல், அவர் சொல் கேட்டல், அவரொடு இணங்கல், அவர்குணம் உரைத்தல்

**48.** <u>நிரல்படுத்துக.</u>

மொழி வகை

(A) சங்கதம், சங்கிரதம், பாகதம், அவப்பிரபஞ்சனம்

(B) சங்கிரதம், சங்கதம், பாகதம், அவப்பிரபஞ்சனம்

(C) அவப்பிரபஞ்சனம், சங்கிரதம், சங்கதம், பாகதம்

(D) சங்கிரதம், சங்கதம், அவப்பிரபஞ்சனம், பாகதம்

**49.** <u>நிரல்படுத்துக.</u>

பாயிரம் கூறுவோர்

(A) தன்னாசிரியன், தன்னோடு கற்றோன், தன்மாணாக்கன், உரைகாரர்

(B) தன்மாணாக்கன், உரைகாரர், தன்னாசிரியன், தன்னோடு கற்றோன்

(C) தன்னாசிரியன், தன்னோடு கற்றோன், உரைகாரர், தன்மாணாக்கன்

(D) உரைகாரர், தன்னாசிரியன், தன்மாணாக்கன், தன்னோடு கற்றோன்



www.examrace.com

50. <u>நிரல்படுத்துக.</u>

பெயர் வகை

(A) பண்புப்பெயர், தொழில் பெயர், வினையாலணையும் பெயர், பொருட்பெயர்

(B) வினையாலணையும் பெயர், தொழில் பெயர், பண்புப்பெயர், பொருட் பெயர்

(C) பொருட் பெயர், பண்புப்பெயர், தொழில் பெயர், வினையாலணையும் பெயர்,

(D) பொருட் பெயர், வினையாலணையும் பெயர், தொழில் பெயர், பண்புப் பெயர்

51. <u>நிரல்படுத்துக.</u>

அவிநய நிலைக்களன்கள்

(A) இயங்கல், நிற்றல், இருத்தல், கிடத்தல்

(B) நிற்றல், இயங்கல், கிடத்தல், இருத்தல்

(C) நிற்றல், இயங்கல், இருத்தல், கிடத்தல்

(D) இருத்தல், கிடத்தல், நிற்றல், இயங்கல்

52. <u>நிரல்படுத்துக.</u>

ஐம்புள்

(A) வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில்

(B) ஆந்தை, காகம், வல்லூறு, மயில், கோழி

(C) கோழி, மயில், வல்லூறு, ஆந்தை, காகம்

(D) வல்லூறு, ஆந்தை, கோழி, காகம், மயில்

53. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | உருது மொழி | (1) | தயார் |
| (b) | துருக்கி மொழி | (2) | மகசூல் |
| (c) | அரபு மொழி | (3) | தூப்பாக்கி |
| (d) | பெர்சிய மொழி | (4) | அக்கப்போர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |



www.examrace.com

**54.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | அகச்சுட்டு | (1) | அப்பொருள் |
| (b) | புறச்சுட்டு | (2) | ஈங்கு |
| (c) | நெஞ்சறி சுட்டு | (3) | அவன் |
| (d) | அண்மைச்சுட்டு | (4) | எல்லாம் அவன் செயல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

**55.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | செய்யுளிசை அளபெடை | (1) | கெடுப்பதூஉம் கெட்டார்க்கு |
| (b) | இன்னிசை அளபெடை | (2) | நற்றாள் தொழாஅர் எனின் |
| (c) | சொல்லிசை அளபெடை | (3) | நம்ம் இறைவன் |
| (d) | ஒற்றளபெடை | (4) | உரன் அசைஇ உள்ளம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 3 | 4 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

**56.** பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | பிறர்க்கென முயலுநர் உண்மையானே | (1) | பரணர் |
| (b) | பெரியோரை வியத்தலும் இலமே | (2) | நக்கீரர் |
| (c) | படைமடம் படாஅன் பிறர்படை மயக்குறினே | (3) | இளம்பெருவழுதி |
| (d) | கற்றோர் அறியா அறிவினர் | (4) | பூங்குன்றனார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 1 | 2 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 3 | 4 | 2 | 1 |



www.examrace.com

57. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | பூங்கொடி | (1) | பண்ணன் |
| (b) | மாங்கனி | (2) | முடியரசன் |
| (c) | செந்நீர் ஓவியம் | (3) | சுத்தானந்த பாரதியார் |
| (d) | பாரத சக்தி மகாகாவியம் | (4) | கண்ணதாசன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

58. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | வரையறுத்த பாட்டியல | (1) | பரஞ்சோதி முனிவர் |
| (b) | வெண்பாப் பாட்டியல | (2) | முத்து வேங்கடசுப்பையா |
| (c) | சிதம்பரப் பாட்டியல | (3) | குணவீர பண்டிதர் |
| (d) | பிரபந்தத் தீபிகை | (4) | சம்பந்த முனிவர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

59. பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| (a) | அறப்பளீசுவர சதகம் | (1) | சதாசிவப் பிள்ளை |
| (b) | குமரேச சதகம் | (2) | அம்பலவாணக் கவிராயர் |
| (c) | இயேசுநாதர் சதகம் | (3) | அய்யம் பெருமாள் |
| (d) | பாண்டிமண்டல சதகம் | (4) | குருபாத தாசர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 1 | 4 | 3 | 2 |



www.examrace.com

60. <u>பொருத்துக:</u>

(a) ஐயம் (1) பாதுகாத்துச் செல்கின்ற பொருட்கள் யாதானும் ஓர் இகழ்ச்சியின் இடையறவு படுதல்

(b) மிகை (2) பிறர் செல்வம் கண்டவழி வேண்டாதிருத்தல்

(c) பொச்சாப்பு (3) கல்லாமையும் செல்வமும் இளமையும் முதலாக வரும் உள்ளம் மிகுதி

(d) பொறாமை (4) ஒருபொருளின் மேல் இருபொருட்டன்மை கருதி வரும் மனத்தடுமாற்றம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 1 | 4 | 2 | 3 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

61. <u>பொருத்துக:</u>

(a) கரடி (1) மருதம்

(b) முயல் (2) பாலை

(c) செந்நாய் (3) குறிஞ்சி

(d) நீர்நாய் (4) முல்லை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 3 | 1 |
| (B) | 2 | 1 | 4 | 3 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 3 | 4 | 2 | 1 |



www.examrace.com

62. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | அபிதான சிந்தாமணி | (1) | வையாபுரிப் பிள்ளை |
| (b) | விவேக சிந்தாமணி | (2) | சிங்காரவேலு முதலியார் |
| (c) | இலக்கியமணி மாலை | (3) | வீராசாமி செட்டியார் |
| (d) | விநோதரச மஞ்சரி | (4) | நிர்க்குண யோகி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 2 | 4 | 3 | 1 |
| (C) | 4 | 3 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

63. <u>பொருத்துக</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | நாகம்மாள் | (1) | தஞ்சை வட்டம் |
| (b) | செந்நெல் | (2) | கரிசல் வட்டம் |
| (c) | பிறகு | (3) | நாஞ்சில் வட்டம் |
| (d) | புத்தம் வீடு | (4) | கொங்கு வட்டம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 4 | 1 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

64. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | ஜெகதீசன் | (1) | பாரதிதாசன் |
| (b) | முத்தையா | (2) | ஈரோடு தமிழன்பன் |
| (c) | சுப்புரத்தினம் | (3) | சுரதா |
| (d) | இராசகோபால் | (4) | கண்ணதாசன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |



www.examrace.com

65. <u>பொருத்துக:</u>

(a) கமலாலயப் பட்டர் (1) திருக்கச்சூர் நொண்டி நாடகம்

(b) சிவக்கொழுந்து தேசிகர் (2) இராம நாடகம்

(c) மாரிமுத்துப் புலவர் (3) பூம்புலியூர் நாடகம்

(d) அருணாசலக் கவிராயர் (4) சரபேந்திர பூபாலக் குறவஞ்சி நாடகம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

66. <u>பொருத்துக:</u>

(a) எழினி (1) சுருங்கை

(b) ஏறங்கோள் (2) வீணையின் உறை

(c) பாம்புரி (3) தலையணி

(d) தெய்வ உத்தி (4) ஒலிக்கப்படும் பறை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 2 | 1 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 2 | 4 | 3 | 1 |
| (D) | 2 | 4 | 1 | 3 |

67. <u>பொருத்துக:</u>

(a) தெம்மாங்கு (1) ஒலிப்புப் பயிற்சிக்காகப் பாடப்படுவது

(b) நாப்புரட்டு (2) வில் எனும் இசைக் கருவியை இசைத்துப் பாடுவது

(c) விடுகதை (3) சிந்துப் பாடல் வகைகளுள் ஒன்று

(d) வில்லுப்பாட்டு (4) நொடியொரு புணர்ந்த பிசி

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 2 | 3 | 1 | 4 |



www.examrace.com

(68 – **75**) பின்வரும் பகுதியைப் படித்துப் பார்த்துத் தொடர்ந்து இடம் பெற்றுள்ள வினாக்களுக்கு ஏற்ற விடையைச் சுட்டுக.

செங்குட்டுவன் என்னும் சிறந்த சேரமன்னன் மலையாள நாட்டில் அரசு வீற்றிருந்தபோது தமிழ் நாட்டில் அரும்பெருஞ் செயலொன்று நிகழ்ந்தது. கற்பின் செல்வியாகிய கண்ணகி பாண்டிய மன்னனைத் தன் கற்பின் திண்மையால் வென்று சேர நாட்டையடைந்து தெய்விகமுற்றாள். இந்த நிகழ்ச்சி மூன்று தமிழ் நாட்டையும் அதிரச் செய்தது. சேர நாட்டு அரசன் தன் நாட்டில் வந்து தெய்விகமுற்ற வீரபத்தினியாகிய கண்ணகிக்குச் சிறந்த திருக்கோயில் ஒன்று அமைத்தான். அக்காட்சியைக் காண்பதற்கு அயல்நாட்டு மன்னர் பலரைச் செங்குட்டுவன் அழைத்திருந்தான். அன்னவருள் ஒருவன் ஈழநாட்டு மன்னன், ‘கடல்சூழ் இலங்கைக் கயவாகு மன்னன்’ என்று சிலப்பதிகாரத்தில் அவ்வரசன் குறிக்கப்படுகிறான். இலங்கை வரலாற்றில் கஜபாகு என்ற பெயருடைய மன்னர் இருவர் இருந்தனர் என்றும் அவருள் முதல் கஜபாகு மன்னனே செங்குட்டுவன் அழைப்பையேற்றுக் கண்ணகி விழாவில் கலந்து கொண்டவன் என்றும் வரலாற்று நூலோர் கூறுவர். தமிழகத்தில் கோயில் கொண்ட கண்ணகியின் பெருமையும் கருணையையும் கண்கூடாகக் கண்ட கஜபாகு மன்னன் இலங்கையிலும் அத்தேவிக்கு ஆலயமைத்து, சிறப்பொடு பூசனை செய்தானென்றும் அதனால் மழை தவறாமல் பெய்து, ஈழநாடு, ‘வளம்பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்’ றென்றும் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது. இன்னும் கண்டி முதலிய பல இடங்களில் கண்ணகி வழிபாடு நடைபெற்று வருவதாகத் தெரிகின்றது. முன்னமே வாணிகத்தால் இணைக்கப் பெற்றிருந்த தமிழகமும் இலங்கையும் கண்ணகி காலந்தொட்டு வழிபாட்டு முறையிலும் இணக்கமுற்றன.

இன்னும் இலங்கைக்கும் தமிழகத்திற்கும் ஆன்மநேய ஒருமைப்பாடும் உண்டு. சிவமணமும், தமிழ் மணமும் ஒருங்கே கமழும் தேவாரம் பாடிய பெரியோர்கள் இலங்கையில் உள்ள சிறந்த சிவஸ்தலங்களைப் பாடியுள்ளார்கள். கடலருகேயுள்ள திருக்கோண மலையைப் பாடினார் திருஞானசம்பந்தர். மாதோட்டம் என்னும் நன்னகரில் அமைந்த மாதொருபாகனைத் தொழுது பாமாலை



www.examrace.com

அணிந்தனர். திருஞானசம்பந்தரும் சுந்தரரும். தமிழ் நாட்டிலுள்ள முருகனடியார்கள் இலங்கையிலுள்ள கதிர்காமத்தை நினைக்குந்தொறும் காதலாகிக் கசிந்து கண்ணீர்ப் பெருக்குவர். அப்படியே ஈழநாட்டிலுள்ள சிவனடியார்க்குச் சிதம்பரமே சிறந்த திருக்கோயில். அன்னார் தில்லைமன்றிலே திருநடனம் புரியும் 'செல்வன் கழலேத்தும் செல்வமே செல்வம்' எனச் சிந்தையாரப் போற்றுவர்; தமிழகத்தில் முருகப் பெருமானுடைய படை வீடுகளாகப் போற்றப்படும் ஆறு பதிகளையும் அகனமர்ந்து ஏத்துவர். அவற்றுள் "உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்" என்று திருமுருகாற்றுப்படையில் புகழ் பெற்ற திருச்செந்தூரை நினைந்து நெக்கு நெக்குருவர். இன்னும் ஈழநாட்டிலே பிறந்து, தமிழ் நாட்டிலே வாழ்ந்து, தமிழ்த் தொண்டு புரிந்த பேரறிஞர் பலராவர். மெய்வருத்தம் பாராது பழைய ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து சிறந்த இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையும் முதன்முதலாக அச்சிட்டுத் தமிழகத்தார்க்கு உதவிய பெருமை யாழ்ப்பாணத்தில் தோன்றிய தாமோதரம் பிள்ளைவர்களுக்கே உரியதாகும். நற்றமிழ்ப் புலமையும் நாவன்மையும் ஒருங்கே வாய்ந்து தமிழ் மொழிக்கும் சிவநெறிக்கும் அரும் பெருந்தொண்டு செய்த ஆறுமுக நாவலரை அறியாதார் தமிழ்கூறு நல்லுலகத்தில் உளரோ ? இந்நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்து நல்லூரிலே பிறந்து தில்லையம்பதியிலே வாழ்ந்து எல்லையற்ற புகழெய்தினார். இன்னும் முத்தமிழில் நடுநாயகமாக விளங்கும் இசைத்தமிழுக்கு விழுமிய தொண்டு செய்த விபுலானந்த அடிகளும் இந்நாட்டவரேயாவர். பழந்தமிழ் நாட்டில் சிறந்த இசைக்கருவியாக விளங்கிய யாழின் திறத்தையும் தமிழிசையின் நலத்தையும் ஆராய்ந்து யாழ்நூல் என்னும் பெயரால் இசையுலகத்திற்கு அரியதொரு விருந்தளித்த அறிஞர் பெருமானை அறியாதார் அறியாதாரே !

இலங்கை நாட்டிலே யாழ்ப்பாணம், தமிழர் வாழும் தொன்னகரம் ; தமிழ்மணங் கமழும் திருநகரம். தமிழர் பண்பாடு யாழ்ப்பாணம் என்ற செல்லிலே விளங்குகின்றது. யாழ்ப்பாணர் என்பார் பழந்தமிழ் நாட்டிலே வாழ்ந்த ஒரு வகுப்பார். பண்ணோடு இசைபாட வல்லவர் பாணர் என்று முன்னாளில் அழைக்கப்பட்டனர். அவருள் யாழிலே வல்லவர்கள் யாழ்ப்பாணர் என்று பெயர் பெற்றார்கள்.



www.examrace.com

**68.** கஜபாகு என்னும் பெயர் கொண்ட மன்னர்

(A) ஒருவர் (B) இருவர்

(C) மூவர் (D) நால்வர்

**69.** உறுதிக்கூற்று: (உ) மூன்று தமிழ்நாடும் அதிர்ந்தது.

காரணம்: (கா)சோழநாட்டில் பிறந்த கண்ணகி பாண்டிய மன்னனை வென்று சேரநாட்டில் தெய்வீகம் அடைந்தாள்

(A) (உ) சரி (கா) சரியன்று

(B) (உ) சரியன்று, (கா) சரி

(C) (உ) , (கா) இரண்டும் சரி

(D) (உ) (கா) இரண்டும் சரியன்று

**70.** உறுதிக்கூற்று: (உ) ஈழநாடு பிழையா விளையுள் நாடாயிற்று

காரணம்: (கா)கண்ணகிக்கு ஆலயம் அமைத்துப் பூசனை நடைபெற்றது

(A) (உ) (கா) இரண்டும் சரியல்ல

(B) (உ) சரி, (கா) சரி

(C) (உ) சரி, (கா) சரியன்று

(D) (உ) சரியன்று (கா) சரி

**71.** தேவாரத்தில் கமழ்வன

I. தமிழ் மணம் II. சிவ மணம்

III. பூ மணம் IV. சந்தன மணம்

இவற்றுள்

(A) I, III சரி (B) II, III சரி

(C) III, IV சரி (D) I, II, சரி



www.examrace.com

72. <u>நிரல்படுத்துக.</u>

(A) நாவலர் பெருமான், தாமோதரம் பிள்ளை, விபுலானந்த அடிகள்

(B) தாமோதரம் பிள்ளை, விபுலானத்த அடிகள், நாவலர் பெருமான்

(C) தாமோதரம் பிள்ளை, நாவலர் பெருமான், விபுலானந்த அடிகள்

(D) நாவலர் பெருமான், விபுலானந்த அடிகள், தாமோதரம் பிள்ளை

73. <u>நிரல்படுத்துக.</u>

(A) சிதம்பரம், மாதோட்டடம், திருகோணமலை, கதிர்காமம்

(B) கதிர்காமம், திருகோணமலை, மாதோட்டடம், சிதம்பரம்

(C) மாதோட்டடம், கதிர்காமம், திருகோணமலை, சிதம்பரம்

(D) திருகோணமலை, மாதோட்டடம், கதிர்காமம், சிதம்பரம்

74. <u>பொருத்துக:</u>

| | | | |
|---|---|---|---|
| (a) | கண்ணகி ஆலயம் | (1) | அலைவாய் |
| (b) | சிவன் ஆலயம் | (2) | தில்லை |
| (c) | முருகன் ஆலயம் | (3) | சேரநாடு |
| (d) | திருநடம்புரியும் செல்வன் ஆலயம் | (4) | மாதோட்டடம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 3 | 1 | 2 | 4 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

75. யாழ்ப்பாணம்

I தமிழர் வாழும் தொன்னகரம்

II தமிழ்மணம் கமழும் திருநகரம்

III தமிழர் பண்பாட்டைக் குறிப்பது

IV பாணர்கள் வாழும் ஒரு நகரம்

இவற்றுள்

(A) I, III,IV சரி

(B) II, III,IV சரி

(C) I, II, IV சரி

(D) I, II, III சரி



www.examrace.com

**Space For Rough Work**

Exam Race



www.examrace.com